பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

11 10 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை அரசியல் கோணத்தில் அணுகக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. செயற்கை நுண்ணறிவு சார்ந்த பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை நித்தி ஆயோக் வெளியிட்டுள்ளது.

3. எல்லைக்கு அப்பாலிலிருந்து தூண்டிவிடப்படும் அனைத்து பயங்கரவாத செயல்களும் கண்டிக்கத்தக்கவை என்று இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் தெரிவித்துள்ளன

4. போர்நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில், காஸாவின் சில பகுதிகளிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புகளை திரும்பப் பெற்றுள்ளது.

5. புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 39-33 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் அணியை வென்றது.

<<<<>>>>

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை அரசியல் கோணத்தில் அணுகக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இது தேசிய பிரச்சினை என்று கூறினார்.

அண்டை நாடுகளிலிருந்து சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்துள்ளவர்கள் வாக்குரிமை பெறுவதை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின் போதும், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தங்களுக்கான ஆதரவு குறைந்து வருவதை அடுத்து, எதிர்க்கட்சிகள் அரசு மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில் தவறு இருந்தால், எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தை நாடலாம் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடவுள்ள பிஜேபி வேட்பாளர்கள் பட்டியல் இன்று அல்லது நாளை வெளியாகும் என்று அம்மாநில பிஜேபி தலைவர் திரு. திலிப் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். கட்சியின் மத்திய நாடாளுமன்ற குழு, இதனை வெளியிடும் என்று கூறினார்.

மாநிலத்தில் கூட்டணி கட்சிகளுக்கு இடையே தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்த எண்ணிக்கை இன்று வெளியாகும் என்றும் திரு. திலிப் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இந்நிலையில், பாட்னாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், தமது கூட்டணி வெற்றி பெற்றால், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படும் என்று கூறினார்.

வேலையின்மையை போக்க, அதிக வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. தேஜஸ்வி யாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு கஷ்மீரிலிருந்து மாநிலங்களவைக்கு 3 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில். 3 வேட்பாளர்களை தேசிய மாநாட்டு கட்சி அறிவித்துள்ளது.

திரு. சௌத்ரி முஹமது ரம்ஜான், திரு. சஜ்ஜத் அஹமது, திரு. ஷாமி ஓப்ராய் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**<<<<>>>>**

செயற்கை நுண்ணறிவு சார்ந்த பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான செயல் திட்டத்தை நித்தி ஆயோக் வெளியிட்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், நித்தி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பி.வி.ஆர். சுப்ரமணியம் இதனை வெளியிட்டார்.

இந்தியாவின் தொழில்நுட்ப சேவைகள் துறை, 2031ஆம் ஆண்டுக்குள் குறிப்பிடத்தக்க வேலைகளை இழக்கும் என்ற அச்சுறுத்தல் இருந்தாலும் அடுத்த ஐந்தாண்டுகளில் செயற்கை நுண்ணறிவுத் துறை, 40 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று செயல்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சில இடையூறுகளை ஏற்படுத்தினாலும், பணிகளை மறுவடிவமைப்பு செய்து வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

எல்லைக்கு அப்பாலிலிருந்து தூண்டிவிடப்படும் அனைத்து பயங்கரவாத செயல்களும் கண்டிக்கத்தக்கவை என்று இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் தெரிவித்துள்ளன.

இந்தியா வந்துள்ள ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. மவுளவி அமீர்கான், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசிய பின்னர் வெளியிடப்பட்ட இருநாடுகளின் கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாடும் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை மதித்து நடக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அமைச்சருடனான சந்திப்பின் போது, பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்ததற்கு, அந்நாட்டிற்கு டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பயங்கரவாதம் குறித்த இந்தியாவின் கவலையை புரிந்து கொண்ட ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர், இந்தியாவுக்கு எதிராக எந்தவொரு தனிநபரோ, குழுவோ தங்களது மண்ணில் இயங்க ஆப்கான் அனுமதிக்காது என்று கூறினார்.

**<<<<>>>>**

காலநிலை மாற்றத்தை தணிப்பதற்கும், பல்லுயிர் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கும் தீர்வுகளை கண்டறிவதில் இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுற்றுச் சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் நடைபெறும் இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கேற்க சென்றுள்ள அவர், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் டாக்டர் Amnabint Abdullah Aldahak-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசினார்.

அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் புதுமையான தீர்வுகளில் இந்தியாவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸும் ஒத்துழைத்து செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சதுப்பு நில காடுகளை பாதுகாப்பதற்கு இந்தியா எடுத்துள்ள நடவடிக்கைகளையும் இந்த சந்திப்பின் போது திரு. கீர்த்தி வர்தன் சிங் விளக்கினார்.

**<<<<>>>>**

தென்னாப்பிரிக்காவின் Gqeberha-வில் நடைபெற்று வரும் ஜி.20 நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர்கள் கூட்டத்தில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா பங்கேற்றார்.

உலக வர்த்தக அமைப்பின் பிரச்சினைகள் குறித்து பல்வேறு நாடுகளின் அமைச்சர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

தென்னாப்பிரிக்காவின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. H.E. Parks Tau-வை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

தென்கொரிய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. Yeo Han Koo-வை சந்தித்துப் பேசிய அமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா, உற்பத்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இந்தியாவும், தென்கொரியாவும் கவனம் செலுத்தும் என்று கூறினார்.

**<<<<>>>>**

கோவாவில் மாநில காவல்துறையின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு நடத்திய திடீர் சோதனையில் 2 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதுதொடர்பாக நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே, இந்த நபர் கடந்த ஆண்டு போதைப் பொருளை கடத்தியதாக கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமினில் விடுவிக்கப்பட்டிருந்தவர் என்று மாநில காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில், காஸாவின் சில பகுதிகளிலிருந்து துருப்புகளை ஓரளவு திரும்பப் பெற்றுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

காஸா பகுதியில் பாதி இடங்களை இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்துள்ள போதிலும், ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்திற்குள் ராணுவத்தின் கணிசமான பிரிவு திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்முயற்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சண்டை நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஹமாஸ் அமைப்பு, பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் படைகள் திரும்ப பெறப்பட்ட பகுதியில், ஹமாஸ் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

காஸா-வை நிர்வகிப்பது முற்றிலும் பாலஸ்தீனத்தின் உள்நாட்டு விவகாரம் என்றும் ஹமாஸ் கூறியுள்ளது.

இதற்கிடையே, ஹமாஸ் பிடியில் உள்ள பிணைக் கைதிகள் அனைவரையும் மீட்பது என்ற வாக்குறுதியை நிறைவேற்றப் போவதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், திரு. Sebastien Lecornu-வை மீண்டும் பிரதமராக நியமித்துள்ளார்.

அந்நாட்டில் நீடித்து வரும் நிச்சயமற்ற அரசியல் சூழலை முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், புதிய அரசை அமைத்து பட்ஜெட்டை தயாரிக்குமாறும் பிரதமரை அதிபர் கேட்டுக் கொண்டார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் சுமையால் அந்நாட்டில் அதிகரித்து வந்த போராட்டங்களை அடுத்து, பிரதமர் திரு. Sebastien Lecornu கடந்த வாரம் தான் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதன் பின்னரும், அரசியல் நெருக்கடி நீடிப்பதால், மீண்டும் அவரை பிரதமராக அதிபர் நியமித்துள்ளார்.

வேலையின்மை மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய கோரிக்கைகளை நிறைவேற்ற முன்னுரிமை அளிக்குமாறு புதிய பிரதமரை திரு. இமானுவேல் மேக்ரோன் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<>>>>

மேற்கு சூடானில் புலம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 53 பேர் உயிரிழந்தனர். 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தகவலை ஐ.நா-வுக்கான மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் திரு. Volker Turk தெரிவித்துள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளாக சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டு கலவரத்தில் இதுவரை 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு கோடியே 40 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

**<<<<>>>>**

சென்னையில் நடைபெற்று வரும் புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 39-33 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் மும்பை அணி 48-29 என்ற புள்ளிக்கணக்கில் பெங்கால் அணியை வீழத்தியது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பெங்களூரு - ஜெய்ப்பூர் அணியையும், தமிழ்நாடு - புனே அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<>>>>**

23 வயதுக்குட்பட்டோருக்கான நட்புறவு கால்பந்து போட்டியில், இந்தோனேஷியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது

ஜகார்த்தாவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

இந்தியாவின் சார்பில் Suhail Ahmed Bhat 2 கோல் அடித்தார்.

**<<<<end>>>>**